1996 ஆகஸ்ட் 22]

தமிழ் மொழியை, உயர் தனிச் செம்மொழியாக அறிவிக்க, இந்த அரசு ஏதாவது காலவரையறை,-'டைம் லிமிட்'—அறிவித்து செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, மத்தியிலே தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு இந்த மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் கேட்ட கேள்விக்கே இடமில்லை. காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே போல ஒரு மாதத்திற்கு முன்னாலேயே, நேரடியாகத் தொலைபேசியில் அழைத்து உடனடியாக மடல் எழுதச் சொன்னார்கள். அதன் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுடைய முன்னாள், இந்நாள் துணை வேந்தர்களைக் கொண்ட வல்லுநர் குழு கூட்டப்பட்டு, அதன் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுத் தலைமை அமைச்சருக்கு கடிதம் எழுதப்பட்டுவிட்டது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் தினமணி தலையங்கங்கள் முன்னும் சரி, இன்றும் சரி, பெரிதும் துணை நின்றதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 216, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

216—

பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்துதல்

***575—திரு. ஆர். மகேந்திரன் :**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளியில் ஓர் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 22

முற்பகல் 10-15

திரு. ஆர். மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர் பகுதிகளில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. இதில் 25 ஆயிரம் லிட்டர் பால் வெளிமாநிலங்களுக்குக் கூட எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுகிறது. எங்கள் தொகுதி மக்கள் நீண்டகாலமாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரி வருகின்றார்கள். எங்கள் பகுதியில் பெரும்பகுதி மக்கள் பால் தொழிலைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். இத்தொழில் மேலும் சிறப்புற நடைபெற நாட்ராம்பள்ளியில், ஒரு பால் குளிரூட்டும் நிலையம் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது ஏற்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி பகுதியில் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு 3 ஆயிரம் லிட்டர்தான். தவிர, நாட்ராம்பள்ளிக்கு அருகில் உள்ள ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையத்தின் குளிரூட்டல் திறன் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 50 ஆயிரம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, நாட்ராம்பள்ளியில் தனியாக பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி பகுதியில் ஒருநாளைக்கு மூன்றாயிரம் லிட்டர் பால்தான் கொள்முதல் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாட்ராம்பள்ளி தொகுதியைப் பொறுத்தமட்டில் ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகின்றது. இந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு அரசு என்ன விதிமுறைகளை வைத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 10 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டால், அந்தப் பகுதியின் தேவைக்கு ஏற்றவாறு ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும். தவிரவும், ஆம்பூருக்கும் நாட்ராம்பள்ளிக்கும் இடையே உள்ள தூரம் 32 கிலோமீட்டர்தான். எனவே, ஒவ்வொரு பிரிவாக, தேவைக்கு ஏற்றாற்போல்தான் பால்

1996 ஆகஸ்ட் 22]

குளிரூட்டும் நிலையம் அமைக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 217, திரு. கு. மனோகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

217—

துணை வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவுதல்

***1270—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரியில் ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டம், தர்மபுரியில் ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகம் நிறுவுவதற்கான கருத்துரு ஏதும் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி நகரம், மாவட்டத்தினுடைய தலை நகரமாகும். தர்மபுரி தொகுதியை ஒட்டியுள்ள மொரப்பூர், அரூர், பெண்ணாகரம், பாலக்கோடு ஆகிய பகுதிகளில் உள்ள மாணவர்கள்கூட கிருஷ்ணகிரியில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்றுதான் பதிவு செய்ய வேண்டியுள்ளது. மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களின் நீண்டநாள் கோரிக்கையாம் மாவட்டத் தலைநகர் தர்மபுரியில் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலாவது துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வேலைவாய்ப்புத் துணை அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கென்று சில வழிமுறைகள் அரசிலே நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலே மாவட்டத் துணை வேலை வாய்ப்பு அலுவலகம் துவங்குகிறோமோ அங்கே தொழில் நிறுவனங்களும், வேலை வாய்ப்புகளும் இருந்தால்தான் எளிதாக வேலைவாய்ப்பு